**பட்டுக்கோட்டை நகராட்சி**

**ஸ்ரீ பிலவ வருடம் ஆவணி மாதம் 15–ம் தேதி திருவள்ளுவராண்டு 2052 (2021–ம் ஆண்டு ஆகஸ்டு 31–ம் தேதி) செவ்வாய் கிழமை மதியம் 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. எல்.குமார், பி.இ.,**
**தனி அலுவலர்/ நகராட்சி பொறியாளர் மற்றும்**
**ஆணையர் (கூ.பொ).**

**பொருள் எண்..1**

இந்நகராட்சி பராமரிப்பில் இருந்து வந்த சுமார் 15 ஆண்டுகள் மற்றும் 2.00லட்சம் கீ.மீ. மேலாகவும் இயங்கி தற்போது இயங்காத நிலையில் உள்ள கீழ்கண்ட எண்ணுள்ள வாகனங்கள் கழிவு நீக்கம் செய்ய மன்றத்தின் பார்வைக்கு

| வ.எண் | வாகனம் | வாகன எண் | வாங்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1 | லாரி | TA0-1647 | 1988 |
| 2 | தம்பர்பிளேசர் | TN49A-4731 | 1994 |
| 3 | டிரைலர் | MDO2466 | 1958 |
| 4 | டிப்பர் | MDO2467 | 1958 |
| 5 | டிராக்கடர் | TA0-4617 | 1989 |
| 6 | லாரி | TN49E-3916 | 1998 |
| 7 | வாட்டர்லாரி | TN49A 6454 | 1995 |

நகராட்சியால் பயன்படுத்தப்பட்ட பல்வேறு துறை வாகனங்களாகிய பொறியியல் துறை,சுகாதாரதுறை மற்றும் பொதுத்துறை போன்ற துறைகளில் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் சுமார் 15 வருடங்களுக்கு மேலாக வாங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாகனங்கள் அனைத்தும் தற்போது இயக்க இயலாத நிலையில் உள்ளது. ஆகவே மேற்படி வாகனங்களை பழுது நீக்கம் செய்யவும், சாலைவரி மற்றம் இன்சூரன்ஸ் கட்டணம் கட்ட வேண்டியஅவசியம் உள்ளது. ஆகவே மேற்படி ஆண்டு வரை மேற்படி தொகை செலுத்த வேண்டுமாயின் நகராட்சிக்கு நிதி அதிகமாக செலவிடப்படும் என்பதாலும் 200000 கீ.மீ தூரம் ஓடிய வாகனங்கள் பழுது நீக்கம் செய்தால் பழைய நிலைக்கு திறம்பட இயங்கும் என்பது சந்தேகமே ஆகவே நகராட்சியின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டும் நிதி சிக்கனத்தை கருத்தில் கொண்டும் கீழ்கண்ட வாகனங்களை கழிவு நீக்கம் செய்து அரசு தானியங்கி பட்டறை அலுவலகத்தில் வாகனம் கழிவு நீக்க சான்று மற்றும் மதிப்பீடு பெறப்பட்டு வாகனங்களை நீக்கம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1)மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2),இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 2980/ 2021 / இ1) |

**தீர்மானம் எண்..153 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..2</u>**

இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.14 அழகிரி மார்கெட் வளாக பகுதியில் உள்ள நகராட்சி கட்டிடத்தில் இயங்கி வரும் ரேஷன் கடைகளின் தரைத்தளம் மற்றும் கடையின் முன்பக்க வராண்டா பகுதி தரைத்தளத்தினை சீர் செய்து டைல்ஸ் பதிக்கும் பணிக்கு 03.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.14 அழகிரி மார்கெட் வளாக பகுதியில் உள்ள நகராட்சி கட்டிடத்தில் இயங்கி வரும் ரேஷன் கடைகளின் தரைத்தளம் மற்றும் கடையின் முன்பக்க வராண்டா பகுதி தரைத்தளத்தினை சீர் செய்து டைல்ஸ் பதிக்கும் பணி | ரூ.1,20,000– | S.கணேசன் பட்டுக்கோட்டை | 0.087% குறைவு |
| | | | S. ஸ்ரீராம்குமார் பட்டுக்கோட்டை | 13.11% அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை S.கணேசன்,ஒப்பந்ததாரர்,பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப் புள்ளியானது S. ராம்குமார், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது.ஆகவே S.கணேசன்,ஒப்பந்ததாரர் பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள S.கணேசன்,ஒப்பந்ததாரர் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 3893/2020 /இ.1) |

**தீர்மானம் எண்..154 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..3</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.15க்குட்பட்ட பகுதியான சுப்பையாபிள்ளை தெருவிலிருக்கும் சிறுபாலம் மற்றும் சுற்றுச்சுவர் பழுதாகியுள்ளது. இதனை பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமாயின் பழுது நீக்கம் செய்ய வேண்டிய அவசியம் கருதி அதற்குண்டான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் நலன் கருதி, பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் அதற்குண்டான உத்தேச மதிப்பீடு ரூ.1.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பொது நிதியின் கீழ் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்..2867/2021/இ1) |

**தீர்மானம் எண்..155 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..4</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.3 ஆதித்தெருவிலிருந்து வரப்பெற்ற புகாரின் அடிப்படையில் மேற்படி இடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.தார்சாலையின் குறுக்கே செல்லக்கூடிய சிறுபாலம் உடைந்து பொதுமக்கள் பெரிதும் அவதிபடுவது தெரியவருகிறது. அம்மக்கள் அனைவரிடம் கேட்டு அறியப்பட்டது. ஒரே சாலையில் மூன்று இடங்களில் சிறுபாலம் உடைந்துள்ளது. ஆகவே அந்த மூன்று சிறுபாலங்களை பொது மக்களின் பயன்பாட்டிற்கு அமைக்க வேண்டுமாயின் பொதுமக்கள் நலன் கருதி உடன் பழுது பணி மேற்கொள்வதற்குஉத்தேச மதிப்பீடு ரூ.2.20 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பொது நிதியின் கீழ் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்..2868/2021/இ1) |

**தீர்மானம் எண்..156 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..5</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட சிவபாக்கியத்தம்மாள் நகர் தெருவாசிகள் கொடுத்துள்ள புகார் மனு குறித்து இடம் ஆய்வு செய்யப்பட்டது. மழைநீர் வடிகால் ஏதும் இல்லாத காரணத்தினால் அப்பூணியில் மழைநீர் தேங்கி டேங்கு மற்றும் வைரஸ் பரவ ஏதுவான சூழல் ஏற்படும் என்பதனால் மழைக்காலங்களில் தேங்கி நிற்கும் தேங்கி மழைநீரை கடத்தி முக்கிய வடிகாலுக்கு கடத்தி வருவதற்கு ஏதுவாக வடிகால் கட்டமைப்பு அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.8.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்..2503/2021/இ1) |

**தீர்மானம் எண்..157 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..6</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கூட்ட நடவடிக்கையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) 2020-21 திட்டத்தின் கீழ் நகராட்சி அரசு மருத்துவமனை வளாகத்தில் சிறப்பு உறைவிடம் ( Special shelter) அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.70.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.404 நாள்.14.02.2020—ன் படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) 2020-21 திட்டத்தின் கீழ் நகராட்சி அரசு மருத்துவமனை வளாகத்தில் சிறப்பு உறைவிடம் ( Special shelter) அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 29.07.2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரா் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1) | S. கணேசன்,பட்டுக்கோட்டை | மதிப்பீட்டை விட 4.97% அதிகம் |
| 2) | S. அபினேஷ்,பட்டுக்கோட்டை | மதிப்பீட்டை விட 8.47 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள S.கணேசன், பட்டுக்கோட்டை அவா்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.97% அதிகமாக உள்ளது. மேற்கண்ட பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரத்தைக் கருதி நகர்மன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி மதிப்பீட்டைவிட 5 சதவிகிதம் கூடுதல் வரை உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம் என நகராட்சி பொறியியல் கையேட்டில் விதி எண்.2.7.2 ல் தெரிவிக்கப்பட்டுள்ளதின் பேரில் மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு,,

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2).ஒப்பந்ததாரா் மதிப்பீட்டை விட 4.97 % கூடுதலாக அளித்துள்ளதால் அதற்குரிய கூடுதல் செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கலாம்
(ந.க.எண்.6468/2014/இ1)

**தீர்மானம் எண்..158 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..7**

இந்நகராட்சிகளில் 15–வது நிதிக்குழு மான்யம் முதல் தவணையின் கீழ் BOB CAT வாகனம் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினகரன் தினசரி நாளிதழுல் பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக்கட்டணம் ரூ.6720/–ஐ பொது நிதியிலிருந்து KAL PUBLICATIONS PVT LTD என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு,, | மன்றம் அனுமதி அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2).அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3672/2021/இ1) |

**தீர்மானம் எண்..159 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..8**

பட்டுக்கோட்டை நகராட்சி ஆழ்குழாய் கிணறுகளில் இயங்கும் மின் மோட்டார்கள் (2 எச்.பி முதல் 40எச்.பி வரை) பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு (01.08.2021 முதல் 31.01.2022 வரை) பணியினை மேற்கொள்ளுவதற்கு 12.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரா்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | பட்டுக்கோட்டை நகராட்சி ஆழ்குழாய் கிணறுகளில் இயங்கும் மின் மோட்டார்கள் (2 எச்.பி முதல் 40எச்.பி வரை) பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். (01.08.2021 முதல் 31.01.2022 வரை) | 4,50,000 | பாபு ரீவைண்டிங் ஒர்க்ஸ், பட்டுக்கோட்டை | 0.34 % குறைவு |
| | | | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 5.88% அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை பாபு ரீவைண்டிங் ஒர்க்ஸ் நிறுவனத்தார் பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே பாபு ரீவைண்டிங் ஒர்க்ஸ், பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பதப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) மேற்காணும் பணிக்கான செலவினத்தினை குடிநீர் நிதியின் மூலம் வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 3) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>(ந.க.எண்.2496/2021/இ2) |

**தீர்மானம் எண்..160 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..9</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி வார்டு எண்..27 வடக்கு வெளி பகுதியில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு 7.5.எச்.பி ஆழ்குழாய் கிணறு நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தும் பணிக்கு 12.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | பட்டுக்கோட்டை நகராட்சி வார்டு எண்..27 வடக்கு வெளி பகுதியில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்கு வதற்கு 7.5.எச்.பி ஆழ்குழாய் கிணறு நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தும் பணி மேற்கொள்ளுதல். | 1,50,000 | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 0.08 % குறைவு |
| | | | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 3.83% அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை கே.எடிசன்,ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே கே.எடிசன்,பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பதப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) மேற்காணும் பணிக்கான செலவினத்தினை குடிநீர் நிதியின் மூலம் வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 3) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..1696/2021/இ2) |

**தீர்மானம் எண்..161 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..10</u>**

இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கசடு கழிவு மேலாண்மை திட்டம் Fecal Sludge Treatment Plant (FSTP) அமைக்கும் திட்டத்திற்கானஉபவிதிகள் மற்றும் பிரிவு 306–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அறிவுரைகள் குறித்து பொதுமக்கள் அறியும் வகையில் தினசரி நாளிதழுல் பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக்கட்டணம் ரூ.9954/–ஐ பொது நிதியிலிருந்து THE DAILY THANTHI என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.. 4618/2018/இ1) |

**தீர்மானம் எண்..162 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..11</u>**

இந்நகராட்சியில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) 2020-21 திட்டத்தின் கீழ் நகராட்சி அரசு மருத்துவமனை வளாகத்தில் சிறப்பு உறைவிடம் ( Special shelter) அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை BRIGHT Advertising என்ற நிறுவனம் மூலம் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் மற்றும் தினசரி நாளிதழுல் பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக்கட்டணம் ரூ.75,758/–ஐ பொது நிதியிலிருந்து BRIGHT Advertising என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.. 6468/2014/இ1) |

**தீர்மானம் எண்..163 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

## பொருள் எண்..12

இந்நகராட்சியில் 2015–ம் ஆண்டு முதல் அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. இவ்உணகத்தில் உள்ள Gas Steamer Pipe Line and vessels Steam Generator (Boiler) ஆகியவை கொள்முதல் செய்து நீண்ட நாள் ஆகியதால், அவ்வப்போது அடைப்புகள் பழுதுகள் ஏற்பட்டு பொது மக்களுக்கு உணவு தயாரிப்பதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே பொது மக்களின் நன்மையை கருதி, இவ்வுணவகத்தில் பழுதுகள் ஏற்பட்டு, பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் உள்ள Steam Generator (Boiler) மற்றும் Pipe Line – யை மாற்றி புதிதாக கொள்முதல் செய்திட ஆகும் தோராய செலவினத்தொகை ரூ.1.88 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1).பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். |
| | 2). அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2576/2019/இ1) |

**தீர்மானம் எண்..164 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

## பொருள் எண்..13

பட்டுக்கோட்டை நகராட்சி 2019–2020ம் ஆண்டு தணிக்கை அறிக்கை தட்டச்சு மற்றும் பைண்டிங், ஜெராக்ஸ் செய்ததற்கான செலவினத் தொகை ரூ.10,700/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு..** | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..2388/2014/பி1) |

**தீர்மானம் எண்..165 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

## பொருள் எண்..14

பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்..15 போஸ்டாபீஸ் கார்னரில் உள்ள உயர் கோபுர மின் தெரு விளக்கு (Highmas light) பெரிதும் பாதிக்கப்பட்டு முக்கியமான சந்திப்பில் விளக்கு எரியாமல் பழுதாகி உள்ளது. பொது மக்கள் பெரிதும் சிரமப்படுவதாக புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. ஆகவே புகார் குறித்து இடத்தினை ஆய்வு செய்யப்பட்டது. அந்த உயர் மின் கோபுர 20 மீட்டர் உயரத்தில் உள்ள மின் விளக்கு பழுது நீக்கம் செய்து மீண்டும் ஒளிரவிட வேண்டுமாயின் 6 எண்ணிக்கை மின் விளக்கு மற்றும் ஏற்றி இறக்கும் ரோப் இதர உபகரணங்கள் முதலிய பொருட்கள் மாற்றம் செய்து உயர் கோபுர மின் விளக்கை நிரந்தரமாக ஒளிரவிட உத்தேச செலவினம் ரூ.2,54,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்து நான்காயிரம் மட்டும்) ஆகும் என்பதுடன் பொது மக்கள் நலன் கருதி உயர் கோபுர மின் விளக்கு பழுது நீக்கம் செய்யவும், பொது நிதியில் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு.. | 1) மன்றம் அனுமதி வழங்கலாம் |
|---|---|
| | 2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பொது நிதியின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்..3047/2021/இ2) |

**தீர்மானம் எண்..166 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..15**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்.2340/2021/A1 நாள்.19.08.2021–ன்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் அலுவலகத்தில் உள்ள மண்டல செயற்பொறியாளர் அவர்களின் வாகனம் வேலை பணிக்காக பல்வேறு நகராட்சிகளில் மேற்பார்வை பணி மேற்கொள்ளப்படுவதால் மேற்படி வாகனத்திற்கு ஓவ்வொரு நகராட்சியின் மூலம் பராமரிப்பு சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி வாகனத்திற்கு பராமரிப்பு பணி சுழற்சியின் அடிப்படையில் தற்போது இந்நகராட்சியில் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படுவதால் வாகன எண்.TN 49 CG 3030க்கான வாகன பராமரிப்பு கட்டணத்தொகை ரூ. 58933.55 /–ஐ Shiva AutoMobiles PVT Ltd என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1) பொது நிதியின் கீழ் மன்றம் அனுமதி வழங்கலாம். |
|---|---|
| | 2).அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.. 1432 /2021 /இ1) |

**தீர்மானம் எண்..167 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..16**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வளவன்புரம் பகுதியில் அமைந்துள்ள நகராட்சி நகர்புற சுகாதார நிலையத்தில் கர்ப்பிணி பெண்கள் ஓய்வெடுக்கின்ற வகையில் கட்டிடத்திற்கு மேற்கூரை அமைக்க பட்டுக்கோட்டை தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரையின் பெயரில் இடம் ஆய்வு செய்யப்பட்டது. சுகாதார நிலையம் எதிரே இரும்பு தகட்டால் ஆன மேற்கூரை அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், இப்பணிக்கான செலவினத் தொகையை 15–வது நிதிக்குழு மான்யம் இரண்டாவது தவணையின் கீழ்பெறப்பட்ட மான்யத்தின் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3063/ 2021 /இ1) |

**தீர்மானம் எண்..168 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..17</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கரிக்காடு பாரதி சாலையில் அப்பகுதியில் வசிக்கும் பொது மக்களிடம் ஆய்வு மேற்கொண்டபோது நேரடியாக மழைநீர் வடிகால் அமைக்கும் கோரிக்கை வைக்கப்பட்டதின் பெயரில் அந்த பகுதியில் ஆய்வு செய்யப்பட்டது. அப்பகுதி மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் கரிக்காடு பாரதி சாலையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.18.75 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், இப்பணிக்கான செலவினத் தொகையை 15–வது நிதிக்குழு மான்யம் இரண்டாவது தவணையின் கீழ்பெறப்பட்ட மான்யத்தின் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2984 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..169 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..18</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆதித்தெருவிலுள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் தற்போது பணி நடைப்பெற்று வருகிறது. அதனை ஆய்வு செய்ய நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையர் பொறுப்பு வருகையின் போது அப்பள்ளி தலைமை ஆசிரியர் கோரிக்கை வைத்ததின் பெயரில் பள்ளி எதிரில் மழைநீர் தேங்கி பள்ளி குழந்தைகள் நடமாட முடியாத அளவிற்கு சாலையிலிருந்து மழைநீர் பள்ளி வளாகத்தில் தேங்கி விடுகிறது. ஆகவே பள்ளியின் எதிரே உள்ள தரைத்தளத்தை குழந்தைகள் நலன்கருதி பேவர் பிளாக் தளமாக மாற்றித் தருமாறு கோரிக்கை வைத்ததின் பெயரில் அதற்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மற்றும் மேற்படி பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி கல்வி நிதியிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | கல்வி நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3044 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..170 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..19</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வளவன்புரம் நகராட்சி ஆரம்ப பள்ளியினை தலைமை ஆசிரியர் கோரிக்கையின்படி நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையர் பொறுப்பு அவர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தலைமை ஆசிரியர் ஆய்வின்போது மழைக்காலங்களில் குழந்தைகள் நடமாட முடியாத அளவிற்கு உள்ளது. ஆகவே பள்ளியின் எதிரே உள்ள தரைத்தளத்தை குழந்தைகள் நலன்கருதி பேவர் பிளாக் தளமாக மாற்றித் தருமாறு கோரிக்கை வைத்ததின் பெயரில் அதனை மாற்றி தருவதுடன் பள்ளி கட்டிடங்கள் பராமரிப்பு பணி செய்ய கோர்கிகை வைத்ததின் பெயரிலும் அதற்குண்டான மதிப்பீட்டுத்

தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மற்றும் மேற்படி பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி கல்வி நிதியிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | ˙ கல்வி நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3014/ 2021 /இ1) |

**தீர்மானம் எண்..171 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..20**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நரியம்பாளையம் பகுதியில் அமைந்துள்ள சமுதாயக்கூடம் பராமரிப்பு பணி செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என பட்டுக்கோட்டை தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரையின் பெயரில் இடம் ஆய்வு செய்யப்பட்டது.அக்கட்டிடத்திற்குண்டான அடிப்படை பராமரிப்பு பணிகளான மின்விளக்கு, கழிப்பிடம், மின்விசிறி,மின்இணைப்பு வயர் மற்றும் வர்ணம் பூசி பயன்பாட்டிற்கு கொண்டு வர உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5.75 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மற்றும் மேற்படி பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | ˙ பொது நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2936/ 2021 /இ1) |

**தீர்மானம் எண்..172 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..21**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7—ல் உள்ள நேரு நகரிலுள்ள சிமிண்ட் சாலை மிகவும் பழுதடைந்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு இடையூறாக பெரிதும் சிரமப்படுகிறார்கள் என புகார் வந்த வண்ணம் உள்ளது. ஆகவே மேற்படி இடம் பார்வையிடப்பட்டது. அந்த சிமெண்ட் சாலையினை பழுது நீக்கம் செய்ய உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1.15 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3180 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..173 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..22</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட காமாட்சி நாயுடு பாளையம்,செட்டித்தெரு,திரௌபதியம்மன் நகர் போன்ற இடங்களில் உள்ள சிறுபாலம் சேதமடைந்து பொது மக்கள் பழுதடைந்த பாலத்தில் பயணிக்க முடியாமல் பெரிதும் சிரமப்படுகிறார்கள். மேலும் கழிவு நீர் தேங்கி தொற்று ஏற்படும் வண்ணம் உள்ளது. ஆகவே மேற்கண்ட மூன்று பாலங்களையும் பழுது நீக்கம் செய்யும் பொருட்டு சிறுபாலம் அமைக்க உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பொது நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2002 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..174 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..23</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கரிக்காடு,சிவக்கொல்லை,NGGO காலணி போன்ற இடங்களில் சிறுபாலம் பழுதடைந்து பொதுமக்கள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.மேற்கண்ட இடங்களில் உள்ள சிறுபாலங்களை பொது மக்கள் நலன் கருதி அந்த சிறுபாலத்தினை பழுது நீக்கம் செய்யஉத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பொது நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3181 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..175 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..24</u>**

இந்நகராட்சி பொறியல் பிரிவு TN-49 AZ -4890 ஈப்பு வாகனம் பழுதாகி இயக்குவதற்கு மிகவும் சிரமமாக உள்ளதால் அதனை உடனடியாக சரிசெய்யும் பொருட்டு மகேந்திரா அண்ட் மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற டீலர் சிவா ஆட்டோ ஒர்க்ஸ், திருச்சி என்ற நிறுவனம் மூலம் உத்தேச மதிப்பீடு பெற்று சீர் செய்திட ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.71774/—க்ககு நிர்வாக அனுமதியும் மற்றும் மேற்படி பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.8048/2006/இ1) |

**தீர்மானம் எண்..176 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..25</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி குடிநீர் விநியோகம் 3 நீரேற்று நிலையங்கள் மற்றும்12 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் தினசரி **6.80MLD அளவு** குளோரின் மின் மோட்டார்கள் பொருத்தி குளோரின் கலந்த குடிநீர் வழங்கப்படுகிறது. கீழ்க்கண்டுள்ள இடங்களில் பொருத்தப்பட்டுள்ள குளோரின் மின் மோட்டார்கள் பழுதடைந்து அதன் பாகங்கள் தேய்மானம் அடைந்துள்ளதால், சீராக இயக்க முடியவில்லை. ஆதனால் குளோரின் அளவு குறைவாக உள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | சாந்தாங்காடு நீரேற்று நிலையம் | 1 எண்ணிக்கை |
| 2. | கொண்டிக்குளம் நீரேற்று நிலையம் | 1 எண்ணிக்கை |
| 3. | லெட்சத்தோப்பு 5 லட்சம் லிட்டர் OHT | 1 எண்ணிக்கை |
| 4. | கரிக்காடு 10 லட்சம் லிட்டர் OHT | 2 எண்ணிக்கை |
| 5. | வளவன்புரம் 5 லட்சம் லிட்டர் OHT | 1 எண்ணிக்கை |

மேற்கண்டுள்ள இடங்களில் பொருத்தப்பட்டுள்ள குளோரின் மின் மோட்டார்கள் மற்றும் Dosing pump service செய்தும் அதற்கான பழுதடைந்த பாகங்களை அகற்றி புதியது பொருத்தி இயக்குவதற்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2.25லட்சத்திற்கு நிர்வாக அனுமதியும் மற்றும் மேற்படி பணிக்கான செலவினத் தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** | இப்பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..3223/2021/இ2) |

**தீர்மானம் எண்..177 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..26</u>**

இந்நகராட்சியில் 15–வது நிதிக்குழு மான்யம் 2020–21 முதல் தவணையின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக ரூ.23.00 இலட்சத்திற்கு BOBCAT வாகனம் கொள்முதல் செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண்.567(அ) நாள்.29.12.2020–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் 15–வது நிதிக்குழு மான்யம் 2020–21 முதல் தவணையின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக BOBCAT வாகனம் கொள்முதல் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 22.07.2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு நிறுவனங்களின் தொழில் நுட்ப உறை பிரிக்கப்பட்டு கூராய்வு செய்தலில் இருவரும் தகுதியுடைய நிறுவனங்களாக தேர்வு செய்யப்பட்டது. பின்னர் விலை விகித உறை பிரித்து ஒப்பீடு செய்யப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1) | Marwell Enncon Tech Pvt. Ltd ,Coimbatore. | மதிப்பீட்டை விட 1.039 % அதிகம் |
| 2) | Pine Equipment Pvt. Ltd ,Coimbatore | மதிப்பீட்டை விட 3.117 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் மதிப்பீட்டை விட கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ள Marwell Enncon Tech Pvt. Ltd ஒப்பந்ததாரர் அவர்களிடம் தங்களால் கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தை குறைத்து தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்பேரில், Marwell Enncon Tech Pvt. Ltd, ஒப்பந்ததாரர் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து தற்போதுள்ள மார்க்கெட் விலை விபரம் மற்றும் பணியாட்களின் கூலி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு தன்னுடைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை குறைத்து கொடுப்பதாக சம்மத கடிதம் கொடுத்துள்ளார்.அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு:

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1) | Marwell Enncon Tech Pvt. Ltd | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள Marwell Enncon Tech Pvt. Ltd, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.05% குறைவாக உள்ளது. ஆகவே Enncon Tech Pvt. Ltd, ஒப்பந்ததாரர் பட்டுக்கோட்டை அவர்களது விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு. | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3672/2020/இ1) |

**தீர்மானம் எண்..178 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..27**

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சி உரக்கிடங்கில் குப்பைகளை Bio-mining முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை Flame advertising co.pvt. ltd என்ற நிறுவனம் மூலம் நமது புரட்சி தலைவி அம்மா மற்றும் டெக்கான் கிரானிக்கல் ஆகிய தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக்கட்டணம் ரூ.71,215/—ஐ பொது நிதியிலிருந்து Flame advertising co.pvt. ltd என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்1986/2018/இ1) |

**தீர்மானம் எண்..179 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..28**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் எண் TN 49 K 6000-க்கு சிறு சிறு பழுதுகள் ஏற்பட்டதனால் அதனை உடனடியாக சரிசெய்வதற்கு 9.08.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| **1.** | Vel Auto Stores, Thanjavur | 15,140- |
| **2.** | Pass Auto Mobiles.Thanjavur | **14,210–** |
| **3.** | Sree Suresh Auto Stores, Thanjavur | **16,509–** |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2–ல் காணும் நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியானது. மற்ற இரண்டு நிறுவனங்களின் விலை விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே **Pass Auto Mobiles.Thanjavur,** நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | வரப்பெற்ற மூன்று நிறுவனங்களின விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள **Pass Auto Mobiles Thanjavur,** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 990 /2014/இ1) |

**தீர்மானம் எண்..180 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..29</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் மழைக்காலங்களில் பேருந்து நிலையத்தின் பயணிகள் நிற்கும் தரை தளத்தில் பயணிகள் நிற்க முடியாத நிலையில் மழைநீர் நிரம்பி பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மேலும் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் பேருந்து நிலையத்தில் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் ஏலம் எடுத்த ஏலதாரர்கள் வியாபாரம் பாதிக்கப்படுகிறது என புகார் வந்த வண்ணம் உள்ளது. மேலும் மழைநீர் தரைதளத்திற்கு வருவதை தடுக்கும் பொருட்டு மேல் தளத்தில் தேங்கும் மழைநீரை புதிதாக குராய் அமைத்து பின்புறத்தில் உள்ள வடிகாலுக்கு கடத்தி சென்று அப்புறப்படுத்த ஏதுவாக குராய் அமைக்க உத்தேச செலவினத்தொகை ரூ.1.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | பொது நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3153/ 2021 /இ1) |

**தீர்மானம் எண்..181 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..30**

பட்டுக்கோட்டை நகராட்சி ஆரம்ப சுகாதார மைய கட்டிடத்தினை மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்து மேற்படி கட்டிடத்திற்கு பராமரிப்பு பணி நடைபெற்றுக்கொண்டு வருவதை பார்வையீட்டு அந்த கட்டிடத்தை முழுவதுமாக பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் எனக்கூறியதின் பெயரில் மேற்படி கட்டிடத்தின் மேற்கூரையில் மழைக்காலங்களில் மின்கசிவு ஏற்படுவதையும், மின்சார வசதி முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளதையும்,தரை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதை சரிசெய்ய வேண்டும் என்பதையும், மின்விசிறிகள் புதிதாக அமைத்த தர வேண்டும் என தெரிவித்துள்ளதை கருத்தில் கொண்டு அந்த கட்டிடத்தை முழுவதுமாக பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமாயின் அதற்குரிய உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் இப்பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பொது நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2930 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..182 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..31**

இந்நகராட்சியில் ஒப்பந்தப்பணிக்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை திறப்பதற்கு புதிதாக digital signature card பெறும் பணிக்கு 25.08.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | Digital identity,35,Karpagam Complex,2nd floor salai road, woraiyur-620003 | 12500– |
| 2. | Welcome infotech,49/23 2nd trust Main Road,Madavelipakkam,Chennai-600028 | 17000– |
| 3. | Arjun technology 18,Teachers colony sundaram Nagar,Trichy-620021 | 18500– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் காணும் நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியானது. மற்ற இரண்டு நிறுவனங்களின் விலை விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே Digital identity நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1).வரப்பெற்ற மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள Digital identity,Trichy நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2).அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி |

| | |
|---|---|
| | அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 2929 /2021/இ1) |

**தீர்மானம் எண்..183 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..32</u>**

இந்நகராட்சியில் ஒப்பந்தப்பணிக்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை திறப்பதற்கு புதிதாக digital signature card பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோருக்கு புதிதாக பெறுவதற்கும் இந்நகராட்சி மேலாளர் அவர்களின் பழைய digital signature card- ஐ புதுப்பிக்கவும் ஆகும் செலவினத்தொகை ரூ.12,500/– நிர்வாக அனுமதியும்,மேற்படி இப்பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பொது நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2929 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..184 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..33</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்..29 நாடியம்மன் கோவில் எதிரில் உள்ள உயர் மின் கோபுர விளக்கில் (Highmas light) உள்ள 4 சோடியம் லைட்டுகள் ‘(250W) பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் இதனால் மின் கசிவு ஏற்படுகிறது. அதனை தடுக்கும் பொருட்டு 4 சோடியம் லைட்டுகளுக்கு பதிலாக 150 வாட்ஸ் LED விளக்குகள் புதிதாக பொருத்த வேண்டி உள்ளது. மேற்படி இடமானது முக்கியமான சந்திப்பில் விளக்கு எரியாமல் பழுதாகி உள்ளது. இதனால் பொது மக்கள் பெரிதும் சிரமப்படுவதாக புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. ஆகவே புகார் குறித்து இடத்தினை ஆய்வு செய்யப்பட்டது. அந்த உயர் மின் கோபுர மின் விளக்குகளில் LED விளக்குகள் புதிதாக பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) ஆகும் என்பதுடன் பொது மக்கள் நலன் கருதி உயர் கோபுர மின் விளக்கு பழுது நீக்கம் செய்யவும், பொது நிதியில் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு..** | மேற்படி பணிக்கான தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்..2928/2021/இ2) |

**தீர்மானம் எண்..185 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..34**

இந்நகராட்சி குடிநீர் விநியோகத்தில் பயன்படுத்தப்படும் வாகனம் TN49 AT 7782- க்கு 2020–2021 மற்றும் 2021–21ஆம் ஆண்டுக்கான மத்திய மாநில அரசுகளுக்கு செலுத்த வேண்டிய சாலைவரி ரூ.9875 /– மற்றும் பசுமை வரி ரூ.505/– ஆக மொத்தம் ரூ.10380/–ஐ அவசர அவசியம் கருதி குடிநீர் லாரி ஓட்டுநர் திரு.எஸ்.சரீப் அவர்கள் மூலம் வட்டார போக்குவரத்து அலுவலர்,வட்டார போக்குவரத்து அலுவலகம் பட்டுக்கோட்டையில் செலுத்தப்பட்டுள்ளது.ஆகவே மேற்படி தொகை ரூ.10380/–ஐ இந்நகராட்சி குடிநீர் லாரி ஓட்டுநர் திரு.எஸ்.சரீப் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) குடிநீர் நிதியின் கீழ் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் இப்பணியை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 2727 /2019/இ1) |

**தீர்மானம் எண்..186 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..35**

செயலர், இந்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நியூ டெல்லி அவர்களின் கோப்பு எண்.. K/ 2017 /367 / 6 / 2020–UPA-II-UD (EFS –089421) நாள்.. 16.03.2021–ன்படி சாலையோர வியாபாரிகளின் (SUSV) வாழ்வாதாரத்தை மேம்படுத்த Deendayal Antyodaya yojana –National Urban Livelihood Mission (Day–NULM) திட்டத்தின் கீழ் புதிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி பொருள் தொடர்பாக நகர சாலையோர வியாபாரிகளுக்கு LOR-ன் அடிப்படையின் கீழ் சாலையோர வியாபாரிகளுக்கு சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை 15.04.2021க்குள் வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்..7366/2016/UPA2, நாள்..19.03.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க, இந்நகராட்சியில் PM SVA Nidhi திட்டத்தின் கீழ் 395 சாலையோர வியாபாரிகளுக்கு கடன் உதவி வழங்க விண்ணப்பம் பெற்று உரிய வங்கிகளுக்கு அனுப்ப நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்..7366/2016/UPA2, நாள்..17.06.2021ல் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதன்பேரில் ஏற்கனவே 287 சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனை சான்று வழங்கப்பட்டுள்ளது. அதில் மீதமுள்ள 108 சாலையோர வியாபாரிகளுக்கு தற்போது விண்ணப்பம் பெறப்பட்டு PMSVANidhi திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்க வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. அதில் மீதமுள்ள சாலையோர வியாபாரிகள் 108 நபர்கள் மற்றும் எதிர்காலத்தில் சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை (ID Card) மற்றும் விற்பனை சான்று (Vending Certificate) வழங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..7737/2015/எப்1) |

**தீர்மானம் எண்..187 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..36</u>**

இந்நகராட்சியில் அலுவலக வளாகம் மற்றும் பேருந்து நிலையத்தில் உள்ள அம்மா உணவகம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் குடிநீர் சுத்தம் செய்யும் (R.O. Water Plant பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளும் பணிக்கு **20.08.2021** அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலைப்புள்ளிகளின் சதவீதம் (மதிப்பீட்டை விட)** |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சியில் அலுவலக வளாகம் மற்றும் பேருந்து நிலையத்தில் உள்ள அம்மா உணவகம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் குடிநீர் சுத்தம் செய்யும் (R.O. Water Plant பழுது பார்க்கும் பணிக்கு | ரூ.22,000/– | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | **0.45** % குறைவு |
| | | | கே.எடிசன் பட்டுக்கோட்டை | **6.82** % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன்,ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்விலைப்புள்ளியானது கே,எடிசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1).வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) இப்பணியின் அவசர அவசியம் கருதி தணி அலுவரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மற்றும் மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 3224/2021 /இ2) |

**தீர்மானம் எண்..188 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

ஒம்/எல்.குமார்
தனி அலுவலர்/ ஆணையாளர் (கூ.பொ)
பட்டுக்கோட்டை நகராட்சி.

**/உண்மை நகல்/**

ஆணையாளர் (கூ.பொ)
பட்டுக்கோட்டை நகராட்சி.